வேளச்சேரி – பரங்கிமலை பறக்கும் ரெயில் பாதை பணி தாமதம் ஏன்?

எடப்பாடி பழனிசாமி விளக்கம்

சென்னை, மார்ச் 12

வேளச்சேரி – பரங்கிமலை பறக்கும் ரெயில் பாதை பணி தாமதம் ஏன்? என்பதற்கு முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி விளக்கம் அளித்தார்.

தமிழக சட்டசபையில் நேற்று நடைபெற்ற மானியக்கோரிக்கை விவாதத்தில் பேசிய தி.மு.க. உறுப்பினர் தா.மோ.அன்பரசன், "ஆலந்தூர் தொகுதியில் உள்ள ஆழப்பாக்கம் ஏரியை சீரமைப்பதற்காக ரூ.3.48 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்காக முதலமைச்சருக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், இன்னும் பணிகள் தொடங்கப்படவில்லை. உடனே பணிகளை தொடங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேபோல், வேளச்சேரி – பரங்கிமலை இடையே 600 மீட்டர் தூரத்திற்கு பறக்கும் ரெயில் பாதை பணி நிறைவடையாமல் உள்ளது. அந்த பணிகளை விரைவாக முடிக்க வேண்டும். ஆலந்தூர் தொகுதியில் கோடை காலத்தில் குடிநீர் தட்டுப்பாடு ஏற்படுகிறது என்று கூறினார்.

அதற்கு பதில் அளித்து முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி கூறியதாவது:

நிலம் எடுக்கின்ற பிரச்சினைகள் காரணமாக தான் நிலுவையில் இருக்கிறது. நீங்கள் சுட்டிக்காட்டுகிறீர்கள். நிலம் எடுப்பது எவ்வளவு பிரச்சினையான ஒன்று என்று உங்களுக்கு நன்றாக தெரியும். உடனடியாக நில உரிமையாளர்களிடத்தில் போய் அந்த நிலத்தை எடுத்துக்கொள்ள முடியாது. ஆகவே, தான் முதற்கட்டப்பணியை முடித்த பிறகு, பாலம் கட்டும் பணியை துவக்கி இருந்தால் சரியாக இருந்திருக்கும். உங்கள் (தி.மு.க.) ஆட்சி காலத்திலே முதற்கட்ட பணி நிலம் எடுக்கின்ற பணி, அந்த பணியை மேற்கொள்ளாமலேயே பாலம் கட்டும் பணியை துவக்கிய காரணத்தினால் தான் இவ்வளவு காலதாமதம் ஆகிறது. இருந்தாலும் விரைந்து பாலம் கட்டும் பணியை முடிப்பதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்கும்.

அதேபோல, ஏரி ஆக்கிரமிப்பு பற்றி சொன்னார்கள். ஏரி ஆக்கிரமிப்பு பகுதிகளை அகற்றுவதற்கு காலம் பிடிக்கும். உடனடியாக அவர்கள் நீதிமன்றத்திற்கு சென்று விடுகிறார்கள். நீதிமன்றத்திற்கு சென்றால் வழக்கு முடியும் வரை காத்திருக்க வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கின்றது. இப்படிப்பட்ட காரணத்தினால் தான் காலதாமதம் ஆகின்றது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். இவற்றை எல்லாம் நிவர்த்தி செய்து வேகமாக இந்த பணிகளை மேற்கொள்வதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் கூறினார்.

முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமியை முகாம் அலுவலகத்தில், ஊரகத் தொழில்துறை அமைச்சர் பென்ஜமின் குடும்பத்தினருடன் சந்தித்து, தனது மகள் திருமணத்திற்கு வருகை தந்து மணமக்களை வாழ்த்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு திருமண அழைப்பிதழை வழங்கினார்

மணப்பாக்கம் மு. பாண்டியன் – மு. காமராஜ் சகோதரர்கள் நடத்தும் இலவச கல்வி மற்றும் கணினி பயிற்சி மையத்தின் 29–ம் ஆண்டு பரிசளிப்பு விழா நிறுவனத்தலைவர் மஞ்சு காமராஜ் தலைமையில் நடைபெற்றது. இதில் துணை முதல்வர் ஓ. பன்னீர்செல்வம் கலந்து கொண்டு இம்மையத்தில் பயிற்சி பெற்று பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்ற 550 மாணவ மாணவிகளுக்கு டைட்டன் கைக்கடிகாரம் மற்றும் ரொக்கப் பரிசுகள் வழங்கி வாழ்த்தினார். அருகில் காஞ்சிபுரம் கிழக்கு மாவட்ட செயலாளர் சிட்லபாக்கம் ராசேந்திரன், ஆலந்தூர் பகுதி செயலாளர் வி.என்.பி. வெங்கட்ராமன், மாவட்ட துணை செயலாளர் அம்மன் பி. வைரமுத்து, காஞ்சி மத்திய மாவட்ட செயலாளர் திருக்கழுக்குன்றம் ஆறுமுகம், மாவட்ட தகவல் தொழில்நுட்ப பிரிவுச் செயலாளர் கே. பிரவீண்குமார், தனசேகரன், சிவராஜ், வரதராஜன், பாலகிருஷ்ணன், பர்மா கண்ணன், ராஜு, அசார் உள்ளிட்ட நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

கடைகள், வணிக நிறுவனங்களின் பெயர்ப்பலகை தமிழில் இல்லாவிட்டால் சட்டப்படி நடவடிக்கை

தொழிலாளர் ஆணையர் எச்சரிக்கை

சென்னை, மார்ச் 12–

கடைகள், வணிக நிறுவனங்களின் பெயர்ப் பலகை தமிழில் இருக்க வேண்டும். விதிகளை பின்பற்றாவிட்டால் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்று தொழிலாளர் ஆணையர் இரா. நந்தகோபால் எச்சரித்துள்ளார்.

இதுகுறித்து அவர் நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:–

தமிழகத்தில் உள்ள அனைத்து கடைகள், வணிக நிறுவனங்கள் மற்றும் உணவு நிறுவனங்களில் பெயர்ப் பலகை தமிழில் இருக்க வேண்டும் என தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்களின் விதிகள், உணவு நிறுவனங்கள் விதிகளிலும் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

இதன்படி, கடைகள், நிறுவனங்களின் பெயர்ப் பலகையில் தமிழ் எழுத்துகள் முதன்மையாக இருக்க வேண்டும் என்றும் மற்ற மொழிகள் பெயர்ப் பலகையில் உபயோகிக்கப்பட்டால் ஆங்கிலம் இரண்டாவது இடத்திலும், ஏனைய மொழிகள் 3ம் இடத்திலும் இருக்க வேண்டும்.

கடைகள், நிறுவனங்களில் பெயர்ப் பலகை வைத்தல் குறித்த சட்டவிதிகளை முறையாக பின்பற்றவில்லை எனில் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

பார்கின்சன், தலசீமியா பாதித்திருக்கும் மாற்றுத்திறனாளிகளுக்கு மாதந்தோறும் 4வது செவ்வாய், புதனில் அடையாள அட்டை

சென்னை கலெக்டர் சீதாலட்சுமி தகவல்

சென்னை, மார்ச் 12–

மல்டிபிள் ஸ்கிளிரோசிஸ், பார்கின்சன் நோய், தலசீமியா, சிக்கல் செல் நோயினால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு அடையாள அட்டை வழங்குவதற்கான சிறப்பு முகாம் மாதந்தோறும் 4வது செவ்வாய் கிழமை மற்றும் புதன்கிழமையில் கே.கே.நகரில் உள்ள எஸ்.ஆர்.டி.சி.யில் நடைபெறுகிறது என கலெக்டர் சீதாலட்சுமி தெரிவித்தார்.

சென்னை மாவட்ட கலெக்டர் சீதாலட்சுமி வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் தெரிவித்துள்ளதாவது:–

மாற்றுத்திறனாளிகளுக்கான உரிமைகள் சட்டம் 2016ன் படி மாற்றுத்திறனாளிகள் 21 வகையான பாதிப்பு உடையவர்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவருக்கும் பாதிப்பின் சதவீதத்துடன் கூடிய மருத்துவச் சான்றிதழ் மற்றும் அடையாள அட்டைகள் வழங்கிட எதுவாக சென்னை கே.கே.நகர் அரசு புறநகர் மருத்துவமனை வளாகத்தில் அமைந்துள்ள மாற்றத்திறனாளிகளுக்கான மாநில வள மற்றும் பயிற்சி மையத்தில் அடையாள அட்டை வழங்குவதற்கான சிறப்பு முகாம்கள் ஒவ்வொரு வாரமும் நடத்தப்பட்டு வருகின்றது.

பார்வைதிறன் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகள் மற்றும் செவித்திறன் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு செவ்வாய்கிழமைகளிலும், அறிவுசார் குறைபாடுடைய மாற்றுத்திறனாளிகளுக்கு வெள்ளிக்கிழமைகளிலும் சம்பந்தப்பட்ட சிறப்பு மருத்துவர்கள் மூலம் அடையாள அட்டை வழங்குவதற்கான சிறப்பு முகாம்கள் காலை 10 மணி முதல் 1 மணி வரை நடத்தப்பட்டு, பாதிப்பின் சதவீதத்துடன் கூடிய மருத்துவ சான்று வழங்கப்படுவதோடு அடையாள அட்டையும் பதிவு செய்யப்படுகிறது.

நடுக்குவாதம்...

தற்போது மல்டிபிள் ஸ்கிளிரோசிஸ் எனும் திசு பன்முக கடினமாதல், பார்க்கின்சன் நோய் எனும் நடுக்கு வாதத்தால், பாதிக்கப்பட்டவர்களுக்கு மாதத்தின் நான்காவது செவ்வாய்கிழமைகளிலும் மற்றும் ஹீமோபீலியா எனப்படும் ரத்தம் உறையாமை மற்றும் ரத்தம் ஒழுக்கு குறைபாடு, தாலசீமியா எனப்படும் ரத்த அழிவு சோகை, சிக்கில் செல் நோய் எனும் அறிவாளணு ரத்தசோகை உள்ளிட்ட பாதிப்புகளை உடைவர்களுக்கு ஒவ்வொரு மாதமும் நான்காவது பதன்கிழமைகளிலும், நரம்பியல் மருத்துவ நிபுணர், மனநல மருத்துவர் மற்றும் குருதி இயல் மருத்துவ நிபுணர் ஆகியோர் அடங்கிய குழு மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில வள மற்றும் பயிற்சி மையத்திற்கு வருகை தந்து மாற்றுத்திறனாளிகளை ஆய்வுசெய்து அவர்களுக்கு பாதிப்பின் சதவீதத்துடன் கூடிய மருத்துவர் சான்று வழங்கிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த மருத்துவச் சான்றின் அடிப்படையில் மாற்றுத்திறனாளிகளுக்கு அடையாள அட்டைகளும் வழங்கப்பட உள்ளன.

எனவே, சென்னை மாவட்டத்தில் வசிக்கும் மேற்குறிப்பிட்ட குறைபாடுடைய மாற்றுத்திறனாளிகள் சென்னை கே.கே.நகரில் அரசு புறநகர் மருத்துவமனை வளாகத்தில் அமைந்துள்ள மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில வள மற்றும் பயிற்சி மையத்தில் நடைபெறும் சிறப்பு முகாமில் கலந்துக் கொண்டு மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டையை பெற்று பயனடையலாம்.

இவ்வாறு கலெக்டர் சீத்தாலட்சுமி தெரிவித்துள்ளார்.

டிமாண்ட் நோட்டீஸ்

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 (மேற்சொன்ன சட்டம்) பிரிவு 13 (2) மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்க) விதிகள் 2002 (மேற்சொன்ன விதிகள்) விதிகள் 3(1)ன் கீழ். கடன்தாரர்கள், டிமாண்ட் நோட்டீசில் குறிப்பிட்டுள்ள தொகையை திரும்பச் செலுத்துமாறு மேற்கண்ட சட்டம், பிரிவு 13(12) மற்றும் மேற்சொன்ன விதிகளின் விதி 3–ன்படி IIFL ஹோம் பைனான்ஸ் லிமிடெட்டின் (IIFL HFL) (முன்னர் இந்தியா இன்போலைன் ஹவுசிங் பைனான்ஸ் லிட்) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி மேற்கண்ட சட்டம் பிரிவு 13(2)–ன் கீழ் டிமாண்ட் நோட்டீஸ் அனுப்பி உள்ளார். இதில் தொடர்புடைய கடன்தாரர்கள் இந்த அறிவிப்பு வெளியான தேதியில் இருந்து 60 நாட்களுக்குள் கடன் தொகையை திரும்ப செலுத்துமாறு மீண்டும் ஒரு முறை கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். செலுத்த வேண்டிய தொகை, டிமாண்ட் நோட்டீஸ் தேதியில் இருந்து தொகையை செலுத்தும் நாள் வரையிலான வட்டி ஆகியவை கொடுக்கப்பட்டுள்ளது. கடன்தாரர்களின் விவரங்கள், டிமாண்ட் நோட்டீஸ் தேதி அனுப்பு உள்ள நிலுவைத் தொகை மற்றும் கடன் தொகையை திரும்ப செலுத்துவதற்காக அளிக்கப்பட்ட பத்திரம் ஆகியவை கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

கடன்தாரர்(கள்)/ உத்தரவாததாரர்(கள்) பெயர்	டிமாண்ட் நோட்டீஸ் தேதி மற்றும் தொகை	ஈடுபெற்ற ஆஸ்திகள் விவரம் (அசையா சொத்துகள்)
திரு. வேலு N, திருமதி தேவிகா R, M/S. குயின் பியூட்டி பார்லர் (புராஸ்பெக்ட் எண்.784329)	09–மார்ச்–20 ரூ. 27,53,962/– (ரூபாய் இருபத்தேழு லட்சத்து ஐம்பத்துமூன்றாயிரத்து தொள்ளாயிரத்துஅறுபத்திரண்டு மட்டும்)	ப்ளாட் எண். 403 மற்றும் அதன் துண்டுகளும் பகுதிகளும். நான்காவது தளம் பிளாக், பிரைட், சுப்ரீம் சிட்டி, கற்குழை தெரு, குப்பர் கட்டிடப் பகுதி 840 சதுர அடி, பெரியகுப்பம் கிராமம், திருவள்ளூர் தாலுக்கா மற்றும் மாவட்டம் தமிழ்நாடு.

மேற்கண்ட கடன்தாரர்கள் IIFL HFL–க்கு செலுத்த வேண்டிய தொகையை செலுத்த தவறினால், மேற்கண்ட சட்டத்தின் பிரிவு 13(4) மற்றும் பொருந்தக்கூடிய விதிகளின் கீழ் மேற்சொன்ன ஈடு பெற்ற ஆஸ்திகள் மீது IIFL HFL நடவடிக்கை மேற்கொள்ளும். இதனால் ஏற்படும் விளைவுகள் மற்றும் கட்டணங்கள் கடன்தாரர்களையே சேரும்.
மேற்கொண்டு விவரங்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, கிளை அலுவலகம்:– IIFL HFL, எண். 120, முதல் தளம், சாந்தி பில்டிங், மெட்ராஸ், ஜெனன் ரோடு, திருவள்ளூர், தமிழ்நாடு 602 001 மற்றும்/அல்லது கார்ப்பரேட் அலுவலகம்: ஐஐஎஃஎல் டவர், மனை எண். 98, உத்யோக் விஹார், பேஸ்–V, குருகான், ஹரியானா அவர்களை அணுகலாம்

இடம் : திருவள்ளூர் தேதி: 12.03.2020

ஒப்பம்/–அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி,
ஐஐஎஃஎல் ஹோம் பைனான்ஸ் லிமிடெட்டிற்காக

EIH அசோசியேட்டட் ஹோட்டல்ஸ் லிமிடெட்

ஓபராய் குரூப் உறுப்பினர்
பதிவு அலுவலகம்: 1/24, ஜி.எஸ்.டி ரோடு, மீனம்பாக்கம், சென்னை–600027.
CIN: L92490TN1983PLC009903
Website: www.eihassociatedhotels.in
Phone: 91-44-22344747, Fax: 91-44-22346699

அறிவிப்பு

இதர அலுவல்களுக்கு இடையே 2019–2020 நிதி ஆண்டுக்கான இடைக்கால டிவிடெண்ட் அறிவிப்பினை பரிசீலித்து, ஒப்புதல் அளிக்க கம்பெனி இயக்குனர்கள் குழுவின் கூட்டம் வெள்ளிக்கிழமை, 13 மார்ச் 2020 அன்று நடைபெறும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.
குழு கூட்டத்தில் இடைக்கால டிவிடெண்ட் ஏதேனும் அறிவிக்கப்பட்டால் அதற்கான பதிவுத் தேதி திங்கட்கிழமை, 23 மார்ச் 2020 ஆகும்.

இந்த அறிவிப்பு கம்பெனியின் இணைய தளம் www.eihassociatedhotels.in மற்றும் ஸ்டாக் எச்சேஞ்சுகளின் இணைய தளங்கள் www.bseindia.com மற்றும் www.nseindia.comலும் உள்ளது.

EIH அசோசியேட்டட் ஹோட்டல்ஸ் லிமிடெட்டுக்காக
இந்த்ராணி ரே
கம்பெனி செயலாளர்

தேதி: 9 மார்ச் 2020

IN THE XVIII ADDITIONAL CITY CIVIL COURT CHENNAI
O.S.No. 8517 of 2019

M/s Karnataka Bank Ltd,
Anna Nagar Branch at
No.123, 'W' Block, Anna Nagar,
Chennai. 600 040,
represented by its
Senior Branch Manager ...Plaintiff
Mrs Nitha Chandrasekar
V/s
M/s Alo Mariline Services,
Represented by its Prop:
Mrs. Srilekha,
W/o Mr. Sukumar.V.S.
No.26/3, Ayyavoo Colony,
Lakshiammal Street, Aminjikarai,
Chennai-29 ... Defendant

Take notice that in the above said Plaint the Hon'ble XVIII Addl City Civil Court Chennai has ordered notice to the defendant returnable by 07.04.2020. You are therefore required to appear in person before the above said court or through your counsel on 07.04.2020 at 10.30 am.

V.S.Ilango
Counsel for Plaintiff

IN THE COURT OF VII ADDL. FAMILY COURT AT CHENNAI
M.C.No.336 of 2018

Ayesha Gani W/o. Ubaidullah
2. U.Rashida Faren
D/o. Ubaidullah
by mother and natural Guardian
No.65B/44B, Alagiri Nagar
4th Street, Vadapalani,
Chennai - 600 026
... Petitioner/Petitione
.. Vs ..
Ubaidullah, S/o.Farook,
WSK Apartments, Judge Flat,
2nd Floor, No.32, Longs Garden
Road, Chennai - 600 002
... Respondent/Respondent

Notice

Please take Notice that the petitioner filed petition in M.C.No.336 of 2018 for Maintenance. The same is came up for hearing on 24.02.2020. The Learned Judge was ordered notice to Respondent and posted the case on 20.03.2020.
So kindly appear before the above court on 20.03.2020 at 1o.30am before the VII Additional Family Court failing which you will be set as exparte and the matter will be decided in your absence.

Ayesha Gani
Petitioner Party in person

IN THE COURT OF HON'BLE VII ADDL. FAMILY COURT JUDGE AT CHENNAI
OP.No. 3992 of 2019

Jerome Selvaraj,
S/o. Anthony Cruz
Plot No.1, 3rd Cross Street,
Lime Light, Cabana Apartment,
Ananda Nagar, Okkiyam
Thoraipakkam, Kancheepuram
District - 600 097. ... Petitioner
Vs
Perpetua Mythili,
D/o. Terance X Venmani
12/6, Bay Line Apartments,
2nd Cross Street, Radhakrishnan
Nagar, Tiruvanmiyur,
Chennni - 600 041.
... Respondent

In the above said Divorce petition the Hon'ble VII Addl. Family Court has ordered notice to you on 07.03.2020 by Paper Publication to you returnable by 24.04.2020. Please take notice and kindly ensure your presence in the above said Court on 24.04.2020 at 10.30.a.m., to raise your objections as to why the said Divorce petition should not be allowed, failing which the matter will be heard and decided in your absence.

Jerome Selvaraj
Petitioner/Party in-Person

BEFORE THE NATIONAL COMPANY LAW TRIBUNAL, CHENNAI
COMPANY APPLICATION NO CA/805/CAA/2019
In CP/1397/CAA/2019
Under Section 230 to 232 of the Companies Act, 2013;
In the matter of Scheme of Arrangement
Between
M/S. APOLLO HOSPITALS ENTERPRISE LIMITED
.....Petitioner/Transferor Company
And
M/S. APOLLO PHARMACIES LIMITED
.....Petitioner/Transferee Company
And
THEIR RESPECTIVE SHAREHOLDERS

Apollo Pharmacies Limited]
CIN:U52500TN2016PLC111328, a]
Company incorporated under the]
Companies Act, 2013 having its]
Registered office at No.19, Bishop]
Gardens, Raja Annamalaipuram,]
Chennai-600028, Tamil Nadu] .....Petitioner Company/Transferee Company

NOTICE OF HEARING OF THE PETITION

A petition under Section 230-232 of the Companies Act, 2013, seeking sanction for the Scheme of Arrangement between Apollo Hospitals Enterprise Limited and Apollo Pharmacies Limited and their respective shareholders was presented on 07th November, 2019 by the Petitioner Company before the Honourable National Company Law Tribunal, (NCLT) and the said petition is fixed for hearing before the National Company Law Tribunal on 26th March, 2020. Any person concerned desirous of supporting or opposing the said petition should send to the Petitioner's Authorised Representative, notice of his/her intention, signed by him or his advocate, with his name and address, so as to reach the petitioner's Authorised representative or to the Company at the below mentioned address, not later than one day before the date fixed for the hearing. Where any person concerned seeks to oppose the aforesaid petition, the grounds of the opposition or copy of his affidavit shall be furnished with such notice. In case no objection/ representation is made, it shall be presumed that there is no Objection/ representation to make against the said petition.

A copy of the petition will be furnished by the undersigned to any person requiring the same on payment of the prescribed charges for the same.

Dated at Chennai on the 10th day of March, 2020

LAKSHMMI SUBRAMANIAN
Senior Partner,
LAKSHMMI SUBRAMANIAN & ASSOCIATES
81, MNO COMPLEX, GREAMS ROAD, CHENNAI
AUTHORISED REPRESENTATIVE OF THE PETITIONER

For Correspondence of the Petitioner Company:
Apollo Pharmacies Limited
Admin Office-G Block, IIIrd Floor-Ali Towers,
No.55, Greams Road, Thousand Lights, Chennai-600006

EPSOM PROPERTIES LIMITED

Registered Office: "Regency House", No. 2A, Second Floor, 250/7, Anna Salai, Teynampet, Chennai – 600 006, Tamilnadu ; **Corporate Identification Number (CIN):** L24231TN1987PLC014084
Tel: +91 44 24350676; **Email:** epsomproperties@gmail.com; **Website:** www.epsom.in

Recommendations of the Committee of Independent Directors ("IDC") of Epsom Properties Limited (hereinafter referred to as "Target Company") in relation to the Open Offer ("Offer") made by Mrs. Vellanki Jhansilaxmi (Alias Vellanki Jhansilakshmi) (hereinafter referred to as "Acquirer"), to the public shareholders of the Target Company under Regulation 3(1) and 4 of Securities and Exchange Board of India (Substantial Acquisition of Shares and Takeovers) Regulations, 2011, as amended (hereinafter referred to as "SEBI SAST Regulations, 2011")

Date	11th March, 2020
Name of the Target Company	Epsom Properties Limited
Details of the Offer pertaining to Target Company	This Offer is being made pursuant to Regulation 3(1) & 4 of the Securities and Exchange Board of India (Substantial Acquisition of Shares and Takeovers) Regulations, 2011 and subsequent amendments thereto ("SEBI SAST Regulations, 2011") for acquisition of upto 19,37,728 Equity Shares of Rs.10/- each at an Offer Price of Rs. 3/- per equity share, payable in cash, aggregating to Rs. 58,13,184/- (Fifty eight lakhs thirteen thousand one hundred and eighty four only) representing 26% of the issued, subscribed, paid up and voting capital
Name of the Acquirer and PAC with the Acquirer	Mrs. Vellanki Jhansilaxmi (Alias Vellanki Jhansilakshmi)
Name of the Manager to the Offer	Finshore Management Services Limited
Members of the Committee of Independent Directors (IDC)	Mr. Kandala Reddy Bhakthavatsala Ms. Yogeshwary
IDC Member's relationship with the Target Company (Director, Equity Shares owned, and other contract/relationship), if any.	All the members of the IDC are Directors of the Target Company. Except for being Directors of the Target Company they have no other relationship with the Target Company.
Trading in the Equity Shares/other securities of the Acquirer by IDC Members	None of the IDC members have traded in the Equity Shares of the Target Company during 12 months prior to the date of the Public Announcement of the Offer on 09.01.2020
IDC Member's relationship with the Acquirers (Director, Equity Shares owned, and other contract/relationship), if any.	None of the IDC members holds any contracts nor have any relationship with the Acquirer
Trading in the Equity Shares/other securities of the Acquirers by IDC Members	Not applicable, since Acquirer is an individual
Recommendation on Open Offer, as to whether the Offer, is or is not, fair and reasonable	Based on the review, IDC Members believe that the Offer is fair and reasonable and in line with the SEBI SAST Regulations, 2011
Summary of reasons for recommendation	IDC Members have reviewed a. Public Announcement (PA) dated 9th January, 2020 b. Detailed Public Statement (DPS) published on 16th January, 2020 c. Draft Letter of Offer dated 23rd January, 2020 d. SEBI observation letter dated 3rd March, 2020 e. Letter of Offer (LOF) dated 9th March, 2020 Based on review of the above documents the members of the IDC are of the view that the offer price is in line with the parameters prescribed by SEBI in the SEBI SAST Regulations, 2011
Details of the Independent Advisors, if any	None
Any other matter to the highlighted	None

To the best of our knowledge and belief, after making proper enquiry, the information contained or accompanying this statement is, in all material respect, true and correct and not misleading, whether by omission of any information or otherwise, and includes all the information required to be disclosed by the Target Company under the SEBI SAST Regulations, 2011.

For and on behalf of the Committee of Independent Directors of Epsom Properties Limited
Kandala Reddy Bhaktavatsala
Chairman of IDC

Place: Bengaluru
Date: 11th March, 2020

AMOL

நரம்பியல் நிவாரண மையம்

STROKE? EPILEPSY? PARKINSON'S?

நோயாளிகள் தங்கும் வசதி உள்ளது
10,000 மேற்பட்டோர் இயல்பு வாழ்க்கைக்கு திரும்பினர்
24 மணி நேரம் பிரத்தியேகப்படுத்தப்பட்ட பராமரிப்பு

+91 90947 44422

Valasaravakkam & OMR | www.amol.co

IN THE HIGH COURT OF JUDICATURE AT MADRAS
(ORDINARY ORIGINAL CIVIL JURISDICTION)
O.P.No.77 of 2019

In the matter of Arbitration and Conciliation Act, 1996
AND
In the matter of Arbitration of dispute between
Mrs. Felisha Sophia
and
M/s. Green Tree Homes and Ventures Pvt. Ltd.,
Oral Agreement

Mrs. Felisha Sophia .I, D/o. Isaac,
No.19, Nadar Thoppu, LM Road, Tirupattur
Vellore District - 635 601. .. Petitioner
AND
M/s. Green Tree Homes & Ventures Pvt. Ltd.,
Power Agent of M/s. LVR Farms Pvt. Ltd.,
Rep. by its Director, Mr.P. Ravichandran,
Having Office at
New No.13, Sriman Srinivasan Road,
Alwarpet, Chennai - 600 018 ...Defendant
To
M/s. Green Tree Homes & Ventures Pvt. Ltd.,
Power Agent of M/s. LVR Farms Pvt. Ltd.,
Rep. by its Director, Mr.P. Ravichandran,
Having Office at New No.13, Sriman Srinivasan Road,
Alwarpet, Chennai- 600 018.

The above matter came up on 24.02.2020 before the Hon'ble Arbitrator, who was pleased to order notice through paper publication returnable by 16.03.2020.
Please take notice that you are required to appear in Court on 16.03.2020 either in person or through your Counsel failing which the matter will be heard and decided in your absence.

M. ARAVIND SUBRAMANIAM,
SRIPRADA PRABHAKAR &
B. SATHASIVAM
COUNSEL FOR PETITIONER
"CAITHNESS HALL", 2ND FLOOR, OLD No.157, NEW No.323,
LINGHI CHETTY STREET, CHENNAI - 600 001.